**வரையறுத்த ரக்னா புரஜெக்ட் மனேஜ்மன்ட் கம்பனி - 2021/2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

வரையறுத்த ரக்னா புரஜெக்ட் மனேஜ்மன்ட் கம்பனியின் "கம்பனி"˙ 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் ஏனைய விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

கம்பனியின் 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறைமை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள்,

செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளினை முறையாக பேணுதல் வேண்டும

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்னிக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் சம்பந்தமாக பார்க்கையில் கம்பனியின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவனம் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 220 ஆம் பிரிவு | ஒரு கம்பனியின் தேறிய சொத்துக்களானது அக்கம்பனியின் வெளியிடப்பட்ட மூலதத்தில் சரி அரைவாசியினை விட குறைவானது எனத் தோன்றுகின்ற சந்தர்ப்பத்தில் கம்பனி அடைந்து கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ள நட்டங்களின் தன்மையும் அளவும், கம்பனி அடைந்துகொள்ள வேண்டி ஏற்பட்டுள்ள நட்டங்களுக்கான காரணம் அல்லது காரணங்கள் மற்றும் அவ்வாறான நட்டம் மேலும் ஏற்படுவதனைத் தவிர்ப்பதற்காக அல்லது அடைந்துகொள்ள வேண்டி ஏற்பட்டுள்ள நட்டத்தை இல்லாமல் ஆக்குவதற்காக | 2022-04-26 ஆந் திகதிய 3/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையில் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றி 2022-07-07 ஆந் திகதியிலிருந்து ரத்னா புரஜெக்ட் மனேஜ்மன்ட் லிமிடட் கம்பனியின் கீழ் ஆரம்பித்துவைக்கப்பட்ட சேதனப் பசளை உற்பத்தி செயற்திட்டத்தின் அனைத்து செயற்பாடுகளையும் கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதனால் 2023-06-30 ஆந் திகதி | அதிகாரச் சட்டத்தின ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பணிப்பாளர் சபையினால் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாகவிருநதால் அந்த நடவடிக்கை தொடர்பாக பங்குதாரர்களுக்கு தெரியப்படுத்தி பணிப்பாளர் சபையினால் ஒரு அறிக்கையினைத் தயாரித்து அந்த அறிக்கையுடன் அக்கம்பனியின் பங்குதாரர்களின் விசேட பொதுக்கூட்டம் அக்கம்பனியின் பணிப்பாளர்களால் கோரப்படுதல் வேண்டும். எனினும் கம்பனி மீளாய்வாண்டின் போது ரூபா 2.65 மில்லியன் தேறிய ஏட்டுப்பெறுமதி மறைப் பெறுமதியாக இருந்தும் மேற்கூறிய பிரமாணத்தின் பிரகாரம் ஒரு அறிக்கையினைத் தயாரிப்பதற்கு அல்லது ஒரு கூட்டத்தினை கூட்டுவதற்கேனும் 2024 மார்ச் 31 ஆந் திகதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடைபெற்ற 153 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு 153(06) ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அச்சபைப் பத்திரத்தின் பிரகாரம் வரையறுத்த ரத்னா பாதுகாப்பு இலங்கை கம்பனியின் பணிப்பாளர் சபையினால் சட்டரீதியாக ரத்னா புரஜெக்ட் மனேஜ்மென்ட் லிமிடட் கம்பனியை மூடுவதற்கு தேவையான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. |

## 2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 யூன் மாதம் 15 ஆந் திகதி ரத்னா பாதுகாப்பு லங்கா கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணைத் தொகுப்பின் 1.10 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு அப்போது நாட்டில் காணப்பட்ட சேதனப் பசளைப் பற்றாக்குறைக்கு ஒரு பரிகாரமாக சேதனப் பசளைகளை தயாரிக்கும் செயற்திட்டத்தை துரிதமாக ஆரம்பிக்குமாறு சனாதிபதி செயலாற்றல் ஆளணியன் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என காட்டப்பட்டிருந்தது. சேதனப் பசளை தயாரிக்கும் நடைமுறைக்காக இந்த (RPML) ரத்னா புரஜெக்ட் மனனேஜ்மன்ட் கம்பனி அமைப்பு புறவிதியில் குறிக்கோள்கள் எதுவும் காட்டப்பட்டிருக்காத போதிலும் சேதனப் பசளை தயாரிக்கும் செயற்திட்டம் தொடர்பாக அமைச்சரவை | வரையறுத்த ரத்னா புரஜெக்ட் மனேஜ்மன்ட் கம்பனி 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் தேற்றுவிக்கப்பட்ட ஒரு கம்பனி என்பதனால் அதனை சட்டரீதியாக மூடுவதற்காக கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் காணப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் 2023-06-30 ஆந் திகதிய 153 ஆவது பணிபாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 153(06) ஆம் இலக்க பணிப்பாளர் சபைப் பத்திரத்திற்காக அறிவுறுத்தல்களை வழங்கி சட்டரீதியான வகையில் இக்கம்பனியை மூடுவதற்குரிய மேலதிக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்பாளர் சபையினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்த அறிவுறுத்தல்களுக்கு இணங்க வரையறுத்த ரத்னா புரஜெக்ட் மனேஜ்மன்ட் கம்பனியை மூடுவதற்காக | வெற்றியளிக்காத செயற்திட்டம் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அங்கீகாரத்தின் எதிர்பார்ப்பில் பணிப்பாளர்கள் சபையினால் கையொப்பமிடப்பட்ட பிரேரணைத் தொகுப்பினை மாத்திரம் உள்ளடக்கி இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. சேதனப் பசளை தயாரிக்கும் நடவடிக்கைகளின் மூலம் 2022 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 2.65 மில்லியன் நட்டம் அடைந்துள்ளதுடன் 2022 யூலை 07 ஆந் திகதி கம்பனியின் சேதனப் பசளை தயாரிப்பு செயற்திட்டத்தின் அனைத்து செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. கணக்காய்வு செய்த கம்பனியின் கணக்கறிக்கைகள் கண்டிப்பானதுடன் அக்கணக்கறிக்கைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் இக்கம்பனியை மூடுவதற்குரிய மேலதிக நடவடிகிகைகளை மேற்கொள்ளலாம். அதற்கிணங்க கணக்காய்வு அவதானிப்புக்களில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சேதனப் பசளை செயற்திட்டமானது நாடு முழுவதிலும் வெற்றியளிக்காத ஒரு செயற்திட்டம் என்பதனால் நிதி நட்டம் ஏற்பட்டுள்ளது என ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது.